முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!
அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் வைகாசி மாதம் 30ம் திகதி முதல் ஆனி மாதம் 6ம் திகதி வரை (13.06.2021 ஞாயிறு முதல் 20.06.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கேளப்பா மானிடா அகத்தியன்சொல்
   கூறிடுவேன் வார ஆசி விளக்கமாக
   பலமான பாரதம் தமிழகம் தன்னில்
   பிலவ விடைதிங்கள் முப்பான் திகதிமேல்
2. மேலாக மிதுன திங்கள் சஷ்டிதிகதிவரை
   மொழிகுவேன் நடக்கும் நிகழ்வாக வருங்காலபலனை
   காலனும் நச்சுக்கிருமி வழியே
   கடும்பயணம் செய்து உயிர்பலி கூட்ட
3. கூட்டவே மக்களிடை பீதியும்
   குவலயமே இந்த நிலை கண்டு
   வாட்டமுற்று உதவும் சூழல் வர
   வறுத்தும் இந்த நிலையில் கூட
4. கூடவே நடுவண் பேதமுற்று
   குறைபட ஆளுமை புரிந்தால்
   கூடுமே தவிர உயிர்பலி குறையா
   குறிப்பாக மாநில பேதம் கொண்டு
5. கொண்டுமே தமிழகத்தை வஞ்சிக்கும்
   குந்தகமான ஆளுமை கண்டால்
   உண்டாகும் நடுவணுக்கு நெருக்கடி
   உலகளவில் உதவி என்றநிலைகடந்து

6. கடந்து வெறுப்பும் நெருக்கடியும்
கட்டாயம் பொருளாதார வழிஅண்டும்
இடரான பொருளாதார சரிவை
இன்னும் மீட்கா அலட்சியம்கொண்டால்

7. கொண்டாலே இந்தியா தானும்
குவலயத்தில் வளரும் நிலையிலிருந்து
உண்டாகும் பின்னடைவு மிகுதி
உணவுபஞ்சம் வறுமைபிணி வேலையின்மையென

8. என எல்லா வகைதனிலும்
ஈடேறா தவிப்பும் எதிர்ப்பும்
ஞானமின்றி மக்களிடை பெருகி
நடுவணுக்கு சோடை உண்டாகும்

9. ஆகவே மாநில உரிமைகட்கு
ஆதரவுபட தாயகமாக இரங்கி
வாகடம் உணவு வகையான உதவி
வழங்கி தயவை கூட்டினால்தான்

10. தன்னிலே இந்தியா வளரும்
தக்கபாதுகாப்பும் தனித்துவமும் பெறும்
நன்னயமாய் தமிழகம் தன்ஆளுமையால்
நல்நிலை பெற்று தேற்றம்பெறும்

வாரஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் வைகாசி மாதம் 30ம் நாள் 13.06.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஆனி மாதம் 6ம் நாள் 20.06.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள்.

அற்புதமான மானுட பிறவியை பெற்றிட்ட மனித குலமே அகத்திய மகரிஷி எனது சொல்லை கேளுங்கள் நீங்கள் அறியவே வார ஆசி நூலாக உரைக்கின்றேன். பலம் மிக்க பாரததேசத்திலும் பிலவ வருடம் வைகாசி மாதம் 30ம் நாள் 13.06.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஆனி மாதம் 6ம் நாள் 20.06.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை எதிர்கால பலன்களாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தற்காலத்தில் காலனாகிய மரணம் நச்சுக் கிருமிகள் மூலமாக உலகமெங்கும் பரவி உயிர்பலிகளை அதிகமாக்கிக் கொண்டிருக்கிறது. ஆதலால் நாட்டு மக்களிடையே மரணபயம் உண்டாகி மக்கள் மிகவும் அச்சமான சூழ்நிலையில் உள்ளனர். உலகமே இத்தகைய இக்கட்டான சூழ்நிலையினை கண்டு இந்திய தேசத்திற்கு உதவுகின்ற சூழலில் உள்ளதப்பா.

மக்களெல்லாம் கடுமையான துன்பம் அனுபவிக்கின்ற இந்த சூழ்நிலையிலும் மத்திய அரசானது மாநில அரசுகளிடையே பாகுபாடுடன் நடந்து கொண்டால் உயிர்பலிகள் நாட்டினில் மேலும் அதிகமாகுமே தவிர குறையாது.

குறிப்பாக தமிழகத்தினை வஞ்சிக்கும் விதமாக மத்திய அரசு மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் பாகுபாட்டுடன் நடந்து கொண்டால் மத்திய அரசிற்கு நெருக்கடிகள் உண்டாகுமப்பா. உலக நாடுகள் இந்திய தேசத்திற்கு உதவும் எண்ணங்கள் குறைந்து தேசத்தில் பொருளாதார நெருக்கடி உண்டாகும்.

நாட்டினில் தற்சமயம் உண்டாகியுள்ள பொருளாதார நெருக்கடியை சரி செய்யாமல் அலட்சியமாக நடந்து கொண்டால் இந்திய தேசம் வளர்ச்சி நிலையில் இருந்து சரிந்து மிகுந்த பின்னடைவை சந்தித்து கடுமையான உணவு பற்றாக்குறை உண்டாகி நாட்டினில் உணவு பஞ்சம் உண்டாகிடும், வறுமை அதிகமாகும், நோய் துன்பமும் அதிகமாகும், வேலையில்லா திண்டாட்டமும் அதிகமாகும். நாட்டின் எல்லா விதமான துறைகளிலும் முன்னேற முடியாமல் மக்கள் மிகுந்த தவிப்பும் உண்டாகி மக்களிடையே எதிர்ப்பு உணர்வு அதிகமாகும். அதனால் மத்திய அரசிற்கு களங்கம் உண்டாகும்.

ஆதலால் மத்திய அரசு மாநில அரசுகளின் உரிமைகளை மதித்து நடந்து தாய்போல் மாநில அரசுகளை அரவணைத்து நடந்து மாநில அரசுகளிடம் பேதா பேதம் பார்க்காமல் இரங்கி மாநில அரசுகளுக்கு தேவையான மருந்துகளையும் உணவுபொருட்களையும் தேவையான அளவு வழங்கி மிகுந்த தயவுடன் நடந்து கொண்டால் தான் இந்திய தேசம் வளர்ச்சி அடையும். பாதுகாப்பு மிக்க தேசமாக மாறும். தனித்துவம் மிக்க சேதமாக மாறும். தமிழகமும் தமது ஆட்சிமுறையால் விரைந்து நல்ல நிலையை அடைந்து கடைத்தேறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–